
# போர்வாள்




நலிந்துகிடக்கும் பார்ப்பனரல்லாத சமுதாயத்திற்கு ஊட்டம் அளிப்பதற்காக ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் அவர்கட்கு ஊட்டிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உணவைத் தொடர்ந்து கொடுக்க முடிவுசெய்து விட்டனர் காங்கிரஸ் சாக்கார். ஆகாது இந்தப் போக்கு என்று ஆர்ப்பரிக்கின்றது ஆரிய வட்டாரம்!


வாள் 2
வீச்சு 30

ஆசிரியர்கள்:-
காஞ்சி மணிமொழியார்.
மா இளஞ்செழியன்.

அணா 1½

ஒரு சிறு நாடகம்

# பூதேவர் தோல்வி!

[சென்ற இதழ் தொடர்ச்சி]

## காட்சி 2.

**இடம்:** மாலூரை யடுத்த மலை மீதுள்ள லோகநாதன் கோவில் முன் மண்டபம்.

**காலம்:** நள்ளிரவு.

(ஆர்யா உத்திரவிடவும் மற்றவர்கள் உத்திரவுப்படி நடந்து கொள்கின்றனர்.)

ஆர்யா: "இந்தக் கோவிலில் ஒன்பது சிலைகள் இருப்பதை எண்ணிப்பார்த்தோம். இப்போது இவ்வொன்பது சிலைகளையும் பெயர்த்துவிட வேண்டும். முதலில் லோகநாதசாமி சிலையைப் பீடத்திலிருந்து பெயர்த்து எடுங்கள்.

(சார்யா, இந்திரா, தந்திரா முதலானவர்கள் அப்படியே பெயர்த்துச் சாய்க்கின்றனர்.)

"சரி லோகநாதன் சந்நதியில் உள்ள துவாரபாலகர், தேவநாதன், நாகநாதன் சிலைகளையும் பெயருங்கள்.

"சரி, மஹாமண்டபத்திலுள்ள சோமநாதன், ஆதிநாதன், மோஹநாதன், சிந்துநாதன் ஆகிய நான்கு சிலைகளையும் பீடங்களிலிருந்து பெயர்த்தெடுங்கள்.

"சரி, முன் வாசலில் உள்ள காவலேஸ்வரர்களாகிய கணநாதன், பூதநாதன் இருவர் சிலைகளையும் பெயர்த்துவிட்டு வாருங்கள்.

(ஆர்யாவின் உத்தரவுப்படி ஒன்பது சிலைகளும் பெயர்க்கப்பட்டுவிட்டன)

"**நல்லது! இவ்வொன்பது சிலைகளையும் ஒவ்வொன்ருகக் கொண்டுபோய் கோயில் திருக்குளத்தில், ஜனங்கள் இறங்காத பக்கத்தில், போட்டுவிட்டு வாருங்கள்.** பீடங்களில் உள்ள தகடுகள், ரத்தினங்களை எடுத்துப் பத்திரமாக வையுங்கள்.

"இன்னும் ஒரு சிறு வேலை பாக்கியிருக்கிறது. லோகநாதன் கர்ப்பகோபுரத்தின் மேல் ஏறி, அங்குள்ள சந்தின் வழியாக நுழைந்து, ஒரு சிறிய துவாரம் செய்து, அத்துவாரத்தின் வழியாக இந்தக் குழாயை நுழைத்து, அதன் வாய், கோபுரத்தின் உட்புறம் வரை செல்லும்படி செய்ய வேண்டும்" என்று சொல்லித் தன்னிடமிருந்த நீண்ட சிறுகுழாய் ஒன்றைத் தந்திராவிடம் கொடுத்தான்.

(குழாயை வாங்கிக்கொண்டு தந்திராவும் கோபுரத்தின்மேல் ஏறிச் சொல்லியவாறு செய்துவந்தான்.)

ஆர்யா: சகோதரர்களே! இப்போது முக்கியமான காரியம் முடிந்தது. பழமையும், பெருமையும் வாய்ந்த இக்கோயிலில் இருந்த தெய்வங்கள் தங்கள் பீடங்களை நமக்களித்துவிட்டு, ஜலவாசம் செய்கின்றன. பக்தர்கள் இந்த அலங்கோலத்தைக் கண்டு கலங்குவார்கள். பக்தர்களுக்குத் தங்கள் அன்பைக் காட்டவும், அவர்களுடைய பக்தியை ஏற்றுக்கொள்ளவும் தக்க பாத்திரம் வேண்டுமல்லவா? அவர்களுடைய அன்பும், ஆதரவும், காணிக்கைப் பொருள்களும் இதுவரை கற்சிலைகளுக்குச் செலுத்தப்பட்டு வந்தன. இனிமேல், நடமாடும், பேசும் தெய்வங்களான நமக்கு அவை செலுத்தப்படும்படி செய்யவேண்டும். பக்தர்களின் அன்பையும், பக்தியையும் காணிக்கைகளையும் நாம் அங்கீகரித்து, பக்தர்களின் ஆத்மலாபத்திற்கு ஆவன செய்து, அவர்களின் ஜன்மங்கள் சாபல்ய மடையும்படி செய்யவேண்டும்! தரித்திர நாராயணன்களாகிய நீங்கள், திருமகள் கடாட்சம் பெற்று லீலா கிருஷ்ணர்களாக விளங்கும்படி செய்ய வேண்டும் இதுதான் என் யோசனை. நீங்கள் எல்லோரும் இதற்கு இஷ்டப்படுகிறீர்களா?

காமா: பலே! என்ன யோசனை என்ன மகத்தான ஏற்பாடு! யாருக்குத் தோன்றும் இவ்வளவு கூரிய யுக்திகள்!

சோமா: பழம் வேண்டாமென்கிற குரங்கும் உண்டா?

சாரி: தேவரீர் சித்தம் எதுவோ அதுவே சரி.

வாமனர்: குருதேவ் காட்டிய பாதையில் நாங்கள் எல்லோரும் எப்போதும் நடப்போம்.

ஆர்யா: அப்படியானால் கேளுங்கள்! நாளைக் காலையில் இந்தக் கோயில் பூசாரி மாலூரிலிருந்து வழக்கம்போல் பூசைக்கு வருவான். கோவிலில் நமமைப் பார்த்தால் உடனே நாம்தான் தெய்வங்கள் என்று நம் காலில் விழுந்து கும்பிடுவானு? நம் எல்லோரையும் திருடர்கள் அயோக்கியர்கள் என்று அடையாளம் வைத்துக்கொண்டு ஓடோடியும் போய் ஊரைத் திரட்டிக்கொண்டு வந்து நம்மைப் பிடித்து நையப்புடைப்பான் அல்லவா? சிலைகளைப் பிடுங்கி மறைத்துவிட்டு, நாங்கள்தான் உயிருள்ள தெய்வங்கள் என்று கதை அளந்தால் அதை, சூத்திரர்கள் மட்டும் நம்பி விடுவார்களா என்ன?

தந்திரர்: குருதேவ்! அடியேங்களுக்கு என்ன தெரியும்? நாங்கள் **பூதேவர்கள்** ஆவதற்கு வழி வகைகளைத் தாங்கள்தான் சொல்லியருளவேண்டும்.

ஆர்யா: (புன்னகை செய்து) நாம் இப்போதே கோவிலைவிட்டுப் புறப்பட்டு விடவேண்டும். விடியுமுன், இந்த மலையின் எதிர்ச்சரிவில் உள்ள சோலையில் சிறிய குகையொன்றிருக்கிறது. அங்கே போய் இரண்டுநாள் தலைமறைவாக இருக்கவேண்டும். தந்திரா! நீ மட்டும் இங்கே தங்கியிருந்து நாளை மறுநாள் காலையில் பூசாரி வருவதற்கு முன்னுல், லோகநாதன் கோபுரத்தின் மீதேறி மறைந்திருந்து, பூசாரி பீடங்களில் சிலைகளைக்காணுது கலங்கிக் கண்ணீர் வடித்து, வாயில் வந்தபடி பிரலாபித்துவிட்டு, ஒன்றுந்தோன்ருமல், "ஏ, லோகநாதசாமி இப்படிச் செய்யலாமா? உன் உண்மை பக்தனுகிய என்னை இவ்வாறு பரிசோதிக்கலாமா? நான் என்செய்வேன், லோகநாதா" என்று சொல்லும்வரை பொறுத்திருந்து, பிறகு, இப்போது பொருத்தியுள்ள குழாயின் வழியாக, நிதானமாகவும், தாழ்ந்த ஆனல் தெளிவான குரலிலும் "............................................" (தந்திராவைப் பக்கத்தில்

அழைத்து அவன் காதில் ரகசியமாகச் சொல்லிவிட்டு) என்று சொல்லிவிட்டு மௌனமாயிருந்து, அதன்மேல் பூசாரி செய்வதையும் பேசுவதையும் கவனித்துக் கொண்டு, அவன் கோயிலைவிட்டு ஊருக்குத் திரும்பியவுடன், கோபுரத்தைவிட்டிறங்கி, ஒருவர் கண்ணிலும் படாமல், நாளை அஸ்தமனத்திற்குள் நாம் போய்த் தங்கும் குகைக்கு வந்து சேரவேண்டியது. எல்லோரையும்விட நீ ஒல்லியாகவும் இனிய குரலுடையவனாகவும் இருப்பதால் உன்னை இந்த முக்கியமான வேலைக்கு நியமித்திருக்கிறேன். நான் சொன்னதெல்லாம் நன்றாக நினைவிருக்கிறதா, தந்திரா?

தந்திரா: தேவரீர் கட்டளையில் எள்ளளவும் பிசகாமல் நடந்து கொள்ளுகிறேன் இது சத்தியம்.

ஆரியர்: இனி நாம் புறப்படலாம். வேளையும் விடியற்காலம் ஆகிவிட்டது. ஆயினும் புறப்படு முன், நம்மில் யார் யார் எந்தெந்த தேவர்களாவது என்பதையும் முடிவுசெய்து கொள்வோம்.

நான்: லோகநாத சாமியாயிருக்கிறேன்!

சாரி! நீ நமது துவார பாலகரில் ஒருவனாகிய "தேவநாதன்!"

தந்திரா நீ மற்ற துவாரபாலகனாகிய "நாகநாதன்"

சோமா! நீ சோமநாதன் ஆகக் கடவாய்.

காமா! நீ மோஹநாதன் ஆகக் கடவாய்.

இந்திரா! நீ ஆதிநாதன் ஆகக் கடவாய்.

வாமனா! நீ சிந்துநாதன் ஆகக் கடவாய்.

வக்கிரா! நீ கணநாதன் ஆகக் கடவாய்.

உக்கிரா! நீ பூதநாதன் ஆகக் கடவாய்.

இந்த நிமிஷம் முதல் நாம் தேவர்களாகிவிட்டோம்!

எல்லாரும்:—ஆர்யாவுக்கு ஜே! குருதேவுக்கு ஜே!

ஆர்யா: நாம் தேவர்களாகிவிட்டாலும், தேவதா அந்தஸ்துக்குரிய ஆடையாபரணங்களை இப்போது அளிப்பதற்கு முடியாமலிருப்பதற்காக நான் வருந்துகிறேன்! ஆயினும் பரவாயில்லை! ஹே! சிந்துநாதரே! உம் துணி மூட்டையை எடும்.

வாமனன் கந்தல் துணி மூட்டையைக் கொண்டு வந்து அவிழ்த்து வைக்கிறான். அதில் பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் முதலிய நிறங்கள் கொண்ட சிறிதும் பெரிதுமான பழைய பட்டுத் துணித் துண்டுகள் இருந்தன. அவற்றில் சுமார் 12, 13 முழம் நீளமுள்ள நீலச் சிற்றாடை ஒன்றுதான், எல்லாவற்றிலும் நீளமானது. ஆர்யா அந்த நீலச் சிற்றாடையை எடுத்துக்கொண்டு "இதோ இந்த இந்திரவர்ணப்பட்டை உங்கள் ஒவ்வொருவருக்கும் சரியாகக் கிழித்துக் கொடுக்கிறேன், இந்த 1½ முழம் நீலப்பட்டே உங்களுடைய தேவ உடையாகும்!"

உக்கிரர்: தேவதேவரே! 1½ முழத்துணி எப்படிப் போதும்? மேல் போர்த்திக்கொண்டால் உள்ளே நம்முடைய அழுக்குப் படிந்த கந்தல் நன்றாகத் தெரியுமே. இவ்வளவு சிறிய துண்டுத் துணியை எப்படி ஆடையாகக் கொள்வது?

ஆர்யா: பொறுமையா பொறும்! 1½ முழத்திற்குமேல் கொடுக்க என்னிடம் துணியில்லை. எனக்கும் 1½ முழம்தான். இதனை மேல் கவசமாக அணிந்துகொள்வதற்குப் போதாது, உண்மையே! நம்முடைய கந்தல் ஆடையை மறைக்கவும் முடியாது! ஆனால், கந்தலை ஏன் மறைக்க வேண்டும்? மறைக்கப்படும் பொருளைப் பற்றித் தானே சந்தேகமேற்படுவது உலக இயல்பு? ஆகையால் இந்திர வர்ணப் பட்டுத்துண்டைக் கந்தலுக்குள்ளே ரவிக்கையைப்போல் கட்டிக்கொள்ளுங்கள். இம்மாதிரி (என்று கட்டிக் காண்பிக்கிறான்) கந்தல் ஓட்டைகளின் வழியே நீல வர்ணப்பட்டு அங்கங்கே சிறிது தெரியும்போது பார்ப்பவர்கள் பல விதமாக நினைக்க இடமுண்டு. மூடு மந்திர மகிமை மற்றபடி வேலை செய்துகொள்ளும்.

சார்யா: பகுபேஷ்! பகுபேஷ்! மஹாதேவரே! தங்கள் மதிநுட்பத்தை என்னென்று வியப்பது! இந்த யோசனை மிகச்சரி. (எல்லோரும் பட்டுத்துண்டை உள்ளே கட்டிக் கொள்ளுகின்றனர்.)

ஆர்யா: "சரி நேரமாகிவிட்டது. பொழுது கிளம்புமுன் மலையின் எதிர்ச்சரிவில் உள்ள குகைக்குப்போய்ச் சேரவேண்டும். இரண்டு நாளைக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் எடுத்துக்கொள்ளுங்கள், போகலாம். தந்திரா, நீ இங்கு தங்குபவன் அல்லவா? ஜாக்கிரதையாக இரு. நான் சொன்னபடி செய், உன் காரியம் ஜெயித்தால்தான் நாம் பூதேவர்களாக முடியும், சரி! உனக்கும் விடிந்தவுடன் ஒருவேலையிருக்கிறது. நீயும் எங்களுடன் இப்போது வருவதற்கில்லை. இன்று மாலூர் சந்தைநாள் அல்லவா? சரி! "சாரி இப்படி வா" என்று சார்யாவைத் தனிப்படக் கூட்டிக் கொண்டுபோய், அவனிடம் ரகசியமாகச் சில விஷயங்களைச் சொல்லிவிட்டு, சார்யா, தந்திரர் இருவர் தவிர மற்ற ஆறு சீடர்களையும் கூட்டிக்கொண்டு மலையின் எதிர்ச்சரிவில் உள்ள சோலையை நோக்கி நடந்தான். தந்திரன் லோகநாதசாமி கோபுரத்தில் தங்கினான். சார்யா மாலூரை நோக்கிச் சென்றான்.

## காட்சி 3.

**இடம்:** மாலூர் சந்தைக்கடை
**காலம்:** நண்பகல்

(சார்யா பெண் வேடத்தில் ஓர் உப்புக் கடைமுன் நின்றுகொண்டு, பலமுறை கொட்டாவியும், பெருமூச்சும் விட்டு, உடம்பை நெளித்து, மூலி முறித்து, இருகைகளையும் சேர்த்துத் தலைக்குமேல் பிடித்து கொண்டு, முன்னும் பின்னும் அசைத்தசைந்து, அஸ்—இஸ்—ஹாய்—ஹாய்—அலலலலா என்று சப்தம் செய்கிறான். இடையிடையே பல்லைக்கடிக்கிறான். சுற்றிலும் ஜனங்கள் வந்து கூடுகின்றனர். பெத்தியணன், செட்டியப்பன், உதயணன், ஊராளி முதலிய மாலூர் குடி ஜனங்களும், பெண்களும் வந்து கூடிவிடுகின்றனர்.)

கூட்டத்தில் ஒருவன்:—
"யாரடா இது! இந்தப் பொம்பளைக்கு இருந்தாப்பிலே இருந்து என்ன வந்தது?"

கூட்டத்தில் மற்றொருவன்:—
"யாரோ, எவரோ! புதுசா இருக்குது, பார்க்கலாமே, என்னதான் செய்யறாண்ணு!

கூட்டத்தில் ஒருத்தி:—
சாமி வந்திட்டுது போலத் தெரியுது! அவள் பார்க்கிற பார்வையைப்பார்!

கூட்டத்தில் மற்றொருத்தி:—
சாமிதான்! சாமிதான்!! அடியே

[10-ம் பக்கம் பார்க்க]

# அவர் அளித்த தீர்ப்பு!

வகுப்புத் துவேஷி!
பிராமண நிந்தகன்!
பார்ப்பன வைரி!
வீணாக வேத வேதியர்களின் உள்ளம் புண்படும்படி பேசுபவன்!
புண்யாத்மாக்களை பழி கூறுபவன்!

ஒரு வகுப்பாரையே சதா தூஷித்துக் கொண்டிருப்பவன்!

கடைந்தெடுத்த வகுப்புவாதி!
துவேஷம் உள்ளமபடைத்தவன்!
தூர்த்தன்!
வசைமொழி கூறுவதையே வாழ்க்கைப் பணியாகக் கொண்டவன்!

வேறு வேலை அற்றவன்! பார்ப்பனரைத் தூஷிப்பது ஒன்றுதானே அவனுக்கு வேலை! சுத்த மோசம்!

* * *

சமுதாயத்திலே பன்னெடுங் காலமாக வேரூன்றிப் போயிருக்கும் சாதி வேறுபாடுகளைக் களைந்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டு வரும் திராவிடக் கழக இளைஞர்கள் மீது பற்பல ஆண்டுகளாகவே பார்ப்பன இனத்தவராலும், உண்மையை உணர முடியாத திராவிடத் தோழர்களாலும் வீசப்பட்டு வரும் பழிச்சொற்கள் இவை! குறிப்பாக, காங்கிரஸ்வாதிகள், கழகத் தோழர்கள் மீது அடிக்கடி சாட்டும் குற்றச்சாட்டு இதுதான். திராவிடக் கழகத்தைத் தாக்க நியாயமான காரணம் எதுவும் கிடைக்காத காரணத்தால் கழகத் தோழர்களை வகுப்புத் துவேஷிகள் என்று கூறுவதிலே ஒரு அலாதிப் பிரியம் காங்கிரஸ் நண்பர்களுக்கு! முன்பெல்லாம் மட்டுமல்ல, இப்போதுங்கூட, பல காங்கிரஸ்காரர்கள் நம் மீது இந்த வசைமொழி அலங்காரத்தைத் தான் வீசி வருகின்றனர். நம்மை வகுப்புவாதிகள் என்று தூற்றுவதிலே, நம்மைப் பார்த்து பிராமணத் துவேஷிகள் என்று கூக்குரல் இடுவதிலே, திராவிடக் கழகமா அது ஒரு வகுப்புவாதக் கட்சியல்லவா என்று பேசுவதிலே, கேவலம் சிவஞானக் கிராமணிகளுக்குக்கூட ஒரு "குஷி"!

இவ்வளவு தூரம் இவர்களாலே பிராமணத் துவேஷிகள் என்று தூற்றப்படும் அளவுக்கு நாம் செய்த மாபாதகம் தான் என்ன? பார்ப்பன இனத்தவருக்கு நியாயமாகத் தரப்படவேண்டிய உரிமைகளைத் தரக்கூடாது என்று முழக்கமிடுகிறோமா? இல்லை! பார்ப்பனர் என்றோர் இனத்தவரே இந்நாட்டில் இருத்தல் ஆகாது என்று பேசுகிறோமா? இல்லை! பார்ப்பனர்கள் அத்தனைபேரும் இந்த நாட்டைவிட்டே துரத்தப்பட வேண்டும என்று மறந்தாவது பேசி இருக்கிறோமா? இல்லை! பார்ப்பனர்கள் நம்மைவிடத் தாழ்ந்த சாதியினர், நம்மிடத்தில் திருமணம் முதலிய உறவுகொள்ள முடியாத அளவு இழிந்த சாதியினர், ஆண்டவனின் பாதத்தில் உதித்தவர்கள், தாசர்கள் தஸ்யூக்கள், சூத்திரர்கள் என்றெல்லாம் அவர்கள் நம்மைத் தூற்றுவது போல நாம் அவர்களைத் தூற்றியிருக்கிறோமா? இல்லை! பார்ப்பனர்களுக்கு உத்தியோகமே தரக்கூடாது, பள்ளிக்கூடங்களில் அவர்களைச் சேர்க்கவேகூடாது, கல்லூரிகளில் அந்த இனத்தவருக்கு இடம் கொடுப்பது கூடவே கூடாது என்றெல்லாம் பேசினோமா — இல்லை! உண்மையிலேயே பார்ப்பனர்தம் உள்ளம் புண்படவேண்டிய அளவுக்கு நாம் ஏதும் பேசியதில்லை. நாம் பேசியதெல்லாம் ஆட்சிப் பீடங்களும் அலுவலகங்களும் வெறும் அக்கிரகாரமாயிருக்கிறதே இது நியாயமா என்பதுதான்! நாம் கேட்டதெல்லாம் கல்லூரிகளில் கால் வைத்தால் தடுக்கிவிழும் இடத்திலெல்லாம் முப்புரி நூல் தென்படுகிறதே இது அடுக்குமா என்பதுதான்! நாம் முழக்கமிட்டதெல்லாம் 100-க்கு 3-பேர் உள்ள ஒரு சிறு கூட்டத்தார் 100-க்கு 90-உத்தியோகங்களும் 100-க்கு 90-பேர் உள்ள இந்த நாட்டு மக்கள் — திராவிடர்கள், 100-க்கு 3-உத்தியோகங்களும் பெறும்படியான அவலநிலை இனியும் இருக்க விடோம் விடோம் என்பதுதான்! நாம் ஏடுகளிலே தீட்டியதும் மேடைகளிலே பேசியதும் பார்ப்பனர்கள் தங்களை மேல்சாதியினர், பூதேவர், பூசுரர், நடமாடும் தெய்வங்கள் என்றும் பிறரெல்லாம் சூத்திரர், இழி சாதியினர், தாழ்த்தப்பட்டவர், தாசர் என்றும் கூறக்கூடாது, கூறுகின்ற வேத புராண இதிகாசங்களை போற்றக்கூடாது, போற்றுகின்ற புல்லர்களை புனிதர்கள் என பூஜிக்கக்கூடாது என்பதைத்தான்! நாம் கேட்டது வகுப்புக்கு வகுப்பு சம நியாயம்! நாம் கேட்டது உத்தியோகங்கள் முழுவதும், கல்வி நீரோடை முழுவதும், சர்க்கார் மாளிகை முழுவதும் ஒரு சிறு கூட்டத்தவரின் ஏகபோக சொத்தாக இருக்கக்கூடாது என்பது! நாம் கேட்டது இன்னும் எத்தனை நாளைக்கு ஒரு சிறு கூட்டத்தவரே உயர் ஜாதியாகவும் மற்ற மக்கள் எல்லாம் தாழ்ந்த சாதியினராகவும் இருந்துகொண்டிருப்பது— இடித்துத் தகர்க்க வேண்டாமா இந்த சாதித் தடைச் சுவர்களை என்பதுதான்! இப்படிக் கேட்டதுதான், கேட்பதுதான், நாம் செய்த "குற்றம்"! இந்த மகத்தான "குற்றம்" புரிந்ததற்கு நாம் பெற்ற—பெறுகிற தண்டனைதான் வகுப்புத்துவேஷி என்கிற பட்டம்!

லோகல் பண்டு ஆடிட் இலாகா என்பது சென்னை சர்க்காரின் அலுவலகங்களில் ஒன்று. அங்கே மொத்தம் 50 இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே 5 பேர் கிறிஸ்தவர்கள். போக மிச்சமிருக்கும் 45 பேரில் பார்ப்பனரல்லாதார் 9! பார்ப்பனர் 36! நினைவிருக்கட்டும், சமுதாயத்தில், பார்ப்பனரல்லாதார் தொகை 100-க்கு 70-க்கு மேல்! பார்ப்பனர் 100-க்கு 3! 100-க்கு 3 உள்ள இனம் 45-ல் 36 அதாவது 100-க்கு 80 உத்தியோகங்களை அடைகிறது! 100க்கு 70 உள்ள இனம் 45-ல் 9 அதாவது 100-க்கு 20 உத்தியோகங்களை அடைகிறது! **நியாயமாக ஜனத்தொகை கணக்குப்படி**, பார்ப்பனருக்குக் கிடைத்திருக்கவேண்டியது 43 ஆனால் கிடைத்திருப்பதோ 9! நியாயமாகப் பெறவேண்டியதைவிட **27 மடங்கு அதிகமான உத்தியோகங்களை அவர்கள்** பெற்றிருக்கிறார்கள். நாமோ நமக்குக்கிடைக்கவேண்டியதைவிட ஒரு உத்தியோகம்கூட அதிகம் பெறவில்லை என்பது மட்டுமல்ல, கிடைக்கவேண்டிய அளவு உத்தியோகம்கூட பெறவில்லை! கிடைக்கவேண்டியதில் பாதிகூட பெறவில்லை! கிடைக்கவேண்டியதில் கால் பங்குக்கு குறைவாகவே பெற்றிருக்கிறோம்

இது நியாயமா? நீதியா? முறையா? அடுக்குமா இந்த அநீதி? இந்த அக்கிரமத்தை இனியும் விட்டுவைக்கலாமா? இதை எடுத்துச் சொல்வது வகுப்புத்துவேஷமா? ஒரு சர்க்கார் இலாகா இதுபோல வெறும் ஆநந்த விகடன் ஆபீசாக இருந்தால் அந்த சர்க்காரிடமிருந்து எப்படி பொது மக்கள் நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? இதைத்தான் நாம் கேட்கிறோம்! இதை எடுத்துச் சொல்லிவிடுகிற மாபாதகத்திற்காகத்தான் நம்மை வகுப்புத்துவேஷிகள் என்று எத்தர்கள் மட்டுமல்ல ஏமாளிகளும் தூற்றுகின்றனர்! ஹிந்து மித்திரன் ஏடுகள் மட்டுமல்ல, சிவஞான கிராமணிகளின் தமிழ் முரசுகளும் கூட ஏசுகின்றன! ஏசட்டும் அவர்கள்! அவர்கள் ஏசுவதை நாம் வேண்டாமென்று கூறவில்லை! ஆனால் அவர்கள் ஏசுகிறார்கள் என்ற காரணத்திற்காக நாம் எப்படி உண்மையை ஊராருக்கு உரைக்காமல் இருக்க முடியும்?

சென்னையில் மொத்தம் பத்து கலைத்துறைக் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் மொத்தம் 1963 மாணவர்கள் படிக்கின்றனர். இவர்களில் ஆதித்திராவிடர் 10, முஸ்லிம்கள் 81, கிறித்தவர்கள் 313 போக மிச்சமுள்ள 1549 இடங்களில் பார்ப்பனரல்லாதாருக்கு 709! பார்ப்பனருக்கு 840! **100-க்கு 3 பேர் உள்ள கூட்டத்தாருக்கு 840! 100-க்கு 70 உள்ள கூட்டத்தாருக்கு 709!** இது அக்கிரமம் அல்லவா? இந்த அக்கிரமத்தை எடுத்துச் சொல்வதுதான், இந்த அக்கிரமத்திற்கு பரிகாரம் தேடுவதுதான், இந்த அக்கிரமத்தை ஒழித்துக் கட்டுவதுதான் வகுப்புத் துவேஷம் என்றால் அத்தகைய வகுப்புத் துவேஷத்தைப் புரிய ஒவ்வொரு தமிழனும் தயார் கூற வேண்டாமா? 'ஒவ்வொரு தமிழனும்' என்ன, நியாயத்திலும் நேர்மையிலும் நம்பிக்கை உடைய யாருக்குமே இந்த வகுப்புத் துவேஷம் கொள்வதைவிட வேறு என்ன அவசரமான அவசியமான சமுதாய சீர்திருத்தப்பணி இருக்க முடியும்?

சென்னை ஓமந்தூர் சர்க்கார், பார்ப்பன இனத்தவருக்கு இன்றிருக்கும் இந்த ஏகபோக உரிமையை ஓரளவேனும் மட்டுப்படுத்தி, தங்கள் நியாயமான உரிமையைக்கூட அடைவதற்கு வழியின்றி அல்லற்பட்டுக் கிடக்கும் திராவிட இனத்தவருக்கு ஓரளவேனும நீதி வழங்க முன்வந்து, சர்க்கார் உத்தியோகங்களுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையையே கையாளவேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றனர். தொழில்துறைக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதிலும் இந்த வகுப்புவாரி முறையைக் கையாள்வது என்ற நல்ல முடிவுக்கு வந்திருக்கின்றனர். நாம் இந்த வகுப்புவாரிப் பிரதிநித்துவ தத்துவத்தை ஆதரிக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காக நம்மை நேற்றுவரை வகுப்புவாதிகள் என்று தூற்றியவர்களும், இன்றையதினமும் இந்தக் காரணத்தைக் காட்டாவிட்டாலும் வேறு ஏதேதோ காரணங்களைக் காட்டி நம்மீது வகுப்புத் துவேஷக் குற்றச்சாட்டை வீசிவருபவர்களும் ஆகிய பலரை அமைச்சர்களாகக் கொண்டு இருக்கும் இந்த மந்திரி சபை, எல்லா வகுப்புகளுக்கும் சமநியாயம் வழங்கும் இந்தக் காரியத்தைச் செய்ய முன் வந்ததும், ஆரிய வட்டாரம் ஆச்சரியப்பட்டது முதலில்! திகைத்து நின்றது பிறகு! சர்க்காரைத் தூற்றி நிற்கிறது—இன்று! கதர் சட்டை என்றாலே கருப்புச் சட்டைக்குப் பரம விரோதி என்றெண்ணினோமே, அப்படி எண்ணமிடுவதற்கு ஏற்றபடிதானே நாட்டு நடப்பும் இதுவரை இருந்துவந்தது, இதென்ன கோலம், கதருக்குள்ளே கருப்பு எப்படிப் புகுந்தது என்றுதான் ஆரியர், ஆளவந்தார்களின் வகுப்பு நியாய உரிமை வாதத்தைக்கண்டு முதலில் ஆச்சரியப்பட்டனர். ஆச்சரியம் பிறகு திகைப்பாக மாறிய காரணம், கதருக்குள்ளே கருப்பு தோன்றும் காட்சி நீடித்தால் நம் நிலை என்ன ஆகுமோ என்ற அச்சம் அவர்களுக்கு பிறந்ததுதான். அச்சம், தூற்றல் அந்தாதியைத் துருவித் துருவிப் பார்த்து வசைமொழிகளைத் தேடி எடுத்து ஓமந்தூர் சர்க்கார் மீது வீசத் தூண்டுகிறது அவர்களை! வீசுகின்றனர்! ஆரிய வட்டாரத்தின் இந்த வசைமொழி வீச்சு ஆளவந்தார்களை கொஞ்சம் சிந்திக்கத் தூண்டியது. சர்க்கார் சிந்தித்தனர். "பார்ப்பனர்களுடன் சேர்ந்துகொண்டு நாமும் கருப்புச் சட்டை இயக்கத்தவரை வகுப்புத் துவேஷிகள் என்று தூற்றி வந்தோமே, இப்போது, அந்தப் பொல்லாத பார்ப்பனர்கள் நம்மையும் அல்லவா அதே வாசகத்தால் தூற்றுகின்றனர்! சரி! சரி! இனி இந்த பார்ப்பனரின் ஆணவத்தை ஓரளவுக்காவது எடுத்துச் சொல்லி அம்பலத்திற்கு இழுக்காவிட்டால் நம்மைச் சும்மாவிட மாட்டார்கள் இந்தச் சூதுமார்க்கத்தவர்" என்ற முடிவுக்கு வந்தனர் முதல்வர் ஓமாந்தூரின் சர்க்கார். அந்த முடிவு கருவூல அமைச்சர் கனம் கோபால ரெட்டியாரின் சட்டசபைப் பேச்சாக வெளிவந்திருக்கிறது.

**"இந்த சர்க்கார் வகுப்புவாதத்துடன் நடந்து செல்கிறது என்று கூறுவதால் உறுப்பினர்களுக்கோ அல்லது பிராமணர்களுக்கோ அது எந்த நன்மையும் செய்துவிடப் போவதில்லை. ஆனால் அதற்குப் பதிலாக மேன்மேலும் நாட்டில் கசப்பும் பகையும் வளரவே செய்யும். எல்லா அதிகாரங்களிலும் எல்லா காலத்திற்கும் எப்பொழுதும் நாங்கள்தான் இருப்போம் என்று குறிப்பிட்ட எந்த ஒரு வகுப்பும் கோருவது என்பது ஜனநாயகம் ஆகாது."**

பார்ப்பனர்களின் போக்குதான் வகுப்புவாதத்தை வளர்க்கிறது, மனக் கசப்பை நாட்டில் உண்டு பண்ணுகிறது, சமுதாயத்தில் சாதிக்குச் சாதி பகைமையை மூட்டுகிறது, எல்லா அதிகாரங்களிலும் எல்லா சமயங்களிலும் நாங்களேதான் இருப்போம் என்று கூறுவது அடாது, ஆகாது என்பதை இவ்வளவு தெளிவாக, திட்டமாக, அழுத்தந் திருத்தமாகக் கூறியதோடு நிற்கவில்லை அமைச்சர் கோபாலனார், அவர் மேலும் கூறியிருக்கிறார்.

**"வகுப்புத் துவேஷம்தான் வகுப்புத் துவேஷத்தை உண்டாக்குகிறது. அப்படியானால் முதன் முதலில் யார் இந்த வகுப்புத் துவேஷத்தை உண்டாக்கியது என்று கேட்கப்படலாம். இந்த வகுப்புத் துவேஷத்தை உண்டாக்கியவன் பிராமணன்தான் என்பது என்னுடைய தீர்ப்பு."**

வகுப்பு வேற்றுமையை வளர்ப்பவன் பார்ப்பனன் என்று முதலில் கூறினார், இப்போதோ, வகுப்பு வேற்றுமைக்கு ஆதி காரணமே பார்ப்பனன்தான் என்பதை வரையறுத்துக் கூறிவிட்டார். 'கருப்புச் சட்டைக்காரன்' இதே உண்மையைத்தான்

(11-ம் பக்கம் பார்க்க)

★ போர்வாள் ★

26—3—49 சனிக்கிழமை

# சிட்டுக்குருவி மீது பிரங்கிப் பிரயோகம்!

பிரபலமான பயில்வான் ஒருவர் வேகமாக வந்துகொண்டிருந்தார்!

அவருடைய அந்த "அரிவாள் வெட்டு" மீசை ஆத்திரத்தால் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

கண்கள் கோவைப் பழம்போல் சிவந்து கொதிக்கும் தணல்போல் அனல் வீசிக்கொண்டிருந்தன.

உதடுகள் பயங்கரமான முறையில் முணுமுணுத்துக் கொண்டிருந்தன. உள்ளம், குமுறும் எரிமலையாகவோ, கொந்தளிக்கும் கடலாகவோ, சுழன்றடிக்கும் சூறுவளியாகவோ இருக்கிறது என்பதை அழகுற விளக்குவதுபோல் அமைந்திருந்தது ஆவேசத்தால் பலப்பல கோணங்களில் அலைந்துகொண்டிருந்த அந்த அழுத்தமான உதடுகளின் தோற்றம்!

மலைபோல வளர்ந்திருந்த அந்த மாபெரிய உடலிலிருந்து, வியர்வை மழைபோல கொட்டிக்கொண்டிருந்தது. வியர்வையின் தேக்கம் ஆங்காங்கே உடலில் தேங்கிநின்ற காட்சி, பொழியும் மழைநீர் ஏரிகளிலும் குளங்களிலும் குட்டைகளிலும் தேங்கி நிற்பதை நினைப்பூட்டும் தன்மையதாக இருந்தது.

யானையின் கால்கள்போல் பருத்திருந்த பயில்வானின் கால்கள் அடிக்கடி தரையை "பூகம்பம்" செய்து கொண்டிருந்தன! கைகளோ, ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்வதும், ஒன்றன் உள்ளங்கையில் மற்றொன்று வேகமாகக் குத்துவதும், ஒரு கை, மற்றொரு கையின் முஷ்டியை இறுக்கிப் பிடித்து முன் கையைப் பார்ப்பதும், அப்படிப் பார்க்கும்போது, அங்கே இரத்தம் கொதிப்பதை நரம்பு புடைப்பதை நீவிரே காண்கவென கண்களுக்கு அழைப்பு விடுப்பதும் ஆகிய இவைபோன்ற வேலைகளில் ஈடுபட்டிருந்தன.

சிறு மலை ஒன்று பெயர்ந்து வேகமாக உருண்டு வருவதைப் போல் இருந்தது பயில்வான் நடந்து வந்த தோற்றம். அந்த மலை மீதுள்ள காடு அதே நேரத்தில் தீப் பற்றிக்கொண்டு திகி திகி என எரிந்துகொண்டிருப்பதைப் போலிருந்தது ஆத்திரத்தின் வயப்பட்டு பயில்வான் ஆவேசத்தை கொதிக்கும் கண்கள் மூலமாகவும் துடிக்கும் கரங்கள் மூலமாகவும் வெளிப்படுத்திக் கொண்டிருந்த காட்சி.

ஆகாயத்தைப் பார்த்தவண்ணம், தன் பிரம்மாண்டமான கைகளையும் கால்களையும் ஆட்டி அசைத்த வண்ணம் வந்து கொண்டிருந்தார் பயில்வான்! எதிரே அவருடைய நண்பர் ஒருவர் வந்தார். இருவரும் சந்தித்தனர்.

நண்பர் கேட்டார்: "அண்ணே! இது என்ன இவ்வளவு ஆவேசம்? இத்தனை ஆத்திரம்? இவ்வளவு கோபம்? எந்த பீமன் எதிர்க்கவந்தான் உங்களை? உங்க பேரைச் சொன்னாலே அண்ட சராசரங்களும் அஞ்சி நடுங்குமே அண்ணே, அப்படியிருக்க உங்களை எவன் அண்ணே, எதிர்க்கத் துணிஞ்சவன்? என்ன நடந்தது அண்ணே? எதிர்த்து மீசை முறுக்கினவன் ரொம்ப பலசாலியா அண்ணே?"

"பூ! பலசாலியாவது சுண்டைக்காயாவது? புல் தடுக்கின குப்புறக் கவிழ்ந்து விழுற பய! ஓலைத் தடுக்காட்டம இருக்கிறான்! ஒரு தட்டு தட்டினா ஒரு காதம் ஓடுவான்! நோஞ்சப் பய! சும்மா கொஞ்சம் 'தும்பு' தட்டினேன்! போயே போயிட்டான்!"—பயில்வான் சொன்னார்!

"என்னண்ணே இது அதிசயமாகவல்லோ இருக்குது நீங்க சொல்றது! நோஞ்சப் பய இன்றீங்க! புல் தடுக்கின குப்புற விழுற குப்பாண்டி இன்றீங்க! ஓலைத் தடுக்கு, உதவாக்கரை, சுண்டக்காய் இன்றீங்க! சும்மா தும்பு தட்டினேன் போயே போய்ட்டான் இன்றீங்க! பிறகு அந்தச் சுண்டக்கா பயலை சட்ணி பண்றதுக்கா அண்ணே உங்களுக்கு இம்மாத்திரம் கஷ்டம்! வியர்வையா கொட்டுதே அண்ணே! பெருமூச்சு புயல் காற்றாட்டம் இருக்குதே அண்ணே! கஷ்டம் ரொம்ப பட்டிருக்கியே அண்ணே! இந்த சுக்கங்காயை நசுக்கிறதுக்கா இவ்வள............—நண்பர் கேட்க ஆரம்பித்தார்!

"மூடு வாயை! அதிகப் பிரசங்கி! ஏதோ எதிர்வீட்டு நாய் ஆச்சேன்னு முகம் கொடுத்துப் பேசினா சும்மா துள்ளறயே, என்ன அது? நிறுத்து பேச்சை! என்னை என்னன்னு நெனைச்சுகிட்டே! கேலியா பேசறே, கேலி! "—பயில்வான் விஸ்வரூபம் எடுக்கலானார், "நண்பர்" பறந்துபோனார்!

"நண்பர்" பறந்து போனாரே தவிர நண்பர் பறந்து போனபிறகு தான் பயில்வானுக்குத் தெரிய வந்தது தாம் எவ்வளவு முட்டாள்தனமாகப் பேசியிருக்கிறோம் என்பது! அதன் பிறகுதான் பயில்வானின் சிந்தனை வேகமாகச் சுழல ஆரம்பித்தது.

"நமக்கோ பெருமூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறது! கண்களோ தணல்போல் சிவந்திருக்கிறது! வியர்வையோ மழைபோல் கொட்டிக்கொண்டிருக்கிறது! கைகால்களோ உதறலால் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன! நாமோ பிரபலமான பயில்வான் என்னும் பெரிய பெயரை வேறு சுமந்து கொண்டிருக்கிறோம்! நாம் பிரபலமான, பெரிய, புகழ் வாழ்ந்த பயில்வான் என்பது மெய்யானால் நமக்கு இவ்வளவு பெருமூச்சு வாங்கும்படியான அளவுக்கு நம்மை எதிர்த்துப் போராடுகின்ற உடல் உரம் படைத்தவனையும் நம்மைப் போலவே ஒரு பெரிய பயில்வான் அல்லது பலசாலி என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும் அல்லது, நம்மை எதிர்த்துப் போராடி, நம் கண்களைச் சிவக்கவைத்து உடலில் வியர்வையைக் கொட்ட வைத்து பெருமூச்சையும் பிறக்க வைத்தவன் ஒரு சுண்டக்காய் என்

பது மெய்யானால் ஒரு சுண்டைக் காயை எதிர்ப்பதற்கே பெருமூச்சு விட்டுத் திணறும் நாம் ஒரு பயில்வான் அல்ல—அந்த சுண்டைக் காயைவிட கேவலமான சுக்கங் காய் என்பதையாவது நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்! இந்த இரண்டில் எதையும் ஒப்புக்கொள்ளாமல், நம்மை பெருமூச்சு வாங்க வைத்த அவனையும் சுண்டக்காய் என்று சொல்லி, அவனால் பெருமூச்சு விடும் நிலைக்கு உள்ளான நம்மையும் பயில்வான் என்று சொல்லிக் கொள்வதிலே அர்த்தமில்லை.''

பயில்வான், இந்த உண்மை நிலையை உணர சில விநாடிகள் தேவைப்பட்டன. உணர்ந்ததும் தலையைக் குனிந்து கொண்டார் வெட்கத்தால்!

* * *

சென்னை நிதி அமைச்சர் **கோபால ரெட்டியார்** இந்தக் கிழமை, சென்னை சட்டசபையில், திராவிடக் கழகத்தை ஒழித்துக் கட்டுவதற்காக சென்னை சர்க்கார் இதுவரை தொடுத்துள்ள அடக்குமுறை பாணங்களை அடுக்கடுக்காக எடுத்துக்காட்டிப் பேசியபோது, நமக்கு, இந்தக் கதைதான் நினைவுக்கு வந்தது! ரெட்டியார் பயில்வான் அல்ல! ஆனால் பயில்வானைப் போலத்தான் ஆத்திரத்தின் மேலீட்டால் ஒன்றுக்கொன்று நேர் முரணான வாசகங்களை வீசியிருக்கிறார் சட்டசபையில்! ஆனால் பயில்வானைப்போலவே, பிறகு, ஓய்வாக இருந்து சிந்தித்தபோது நிச்சயம் உணர்ந்துகொண்டிருப்பார், தம் பேச்சு எவ்வளவு நகைப்புக்கிடமானதாக இருந்திருக்கிறது என்பதனை! உணர்ந்ததும், பயில்வானைப் போலவே, தலையைக் குனிந்து கொண்டிருப்பார் வெட்கத்தால்—இதில் சிறிதும் ஐயமில்லை!

* * *

''1948 மார்ச் 2-ந் தேதியன்று கருப்புச்சட்டைப் படையை சட்ட விரோதமானது என்று பிரகடனம் செய்தோம்!

''பிறகு, மேற்படி கட்சியின் தினசரியான ''விடுதலை''மீது ரூ. 2000 ஜாமீன் என்கிற பாணத்தை வீசினோம்,

''1948 ஜூலை மாதம், ''இரணியன்', என்ற நாடகத்தை மாகாணம் எங்கணும் நடத்தக் கூடாது என்று தடை விதித்தோம்.

''மேற்படி நாடகத்தை வடார்க்காடு மாவட்டத்தில் செய்யாறு என்னும் ஊரில் நடிக்க முன்வந்த பன்னிரு தோழர்களை கைது செய்தோம், வழக்குத் தொடுத்தோம், தண்டனை தந்தோம், சிறைச்சாலையில் தள்ளினோம்.

''திராவிடர் கழகத் தலைவர்களின் பேச்சுகளை எழுத்து எழுத்தாக அலசிப் பார்த்து வருகிறோம்! ஆட்சேபகரமானது என்று கருதப்படக்கூடிய வாசகம் ஒன்றிரண்டு கிடைத்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறோம்.

''பற்பல ஊர்களில் கழகக் கூட்டங்களுக்கு144 போட்டிருக்கிறோம். எத்தனையோ ஊர்களில் அவர்களுடைய ஊர்வலங்களுக்கு தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறோம்.

''தடை உத்தரவை மீறி கூட்டங்களிற் பேசியவர்களை கைது செய்திருக்கிறோம், ஊர்வலங்கள் நடத்தியவர்களை சிறையில் தள்ளி இருக்கிறோம்.

''தடை உத்தரவை மீறி நடத்தப்பட்ட கூட்டங்களையும் ஊர்வலங்களையும் பலாத்காரத்தின் துணை கொண்டு கலைத்திருக்கிறோம்.

''அவர்களில் பிரபலஸ்தர்கள் மீது ஜாமீன் வழக்கு ஆரம்பித்திருக்கிறோம்.

''1948 ஆகஸ்டு 23ந் தேதி கவர்னர் ஜெனரல் சென்னைக்கு வருகை செய்தபோது, கழக முக்யஸ்தர்கள் 95 பேரை ஒரே சமயத்தில் கைது செய்து சிறையில் வைத்திருக்கிறோம்.

''இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட எண்ணற்ற கழகத் தொண்டர்களை இரும்புக் கம்பிகளை எண்ண வைத்திருக்கிறோம்.

''நகர போலீஸ் சட்டம் 41வது பிரிவுப்படி அவர்களிற் பலர்மீது வழக்கும் தொடுத்திருக்கிறோம்.

''கும்பகோணத்தில் 1948 டிசம்பர் 19ந் தேதி, கழகத் தலைவர் ஈ. வெ. ரா. வை கைது செய்திருக்கிறோம்

''வேறு நான்கு முக்யஸ்தர்களுக்கும் சிறைச்சாலை அன்பழைப்பை அன்புடன் அளித்திருக்கிறோம்.

''இன்னும் இவைபோன்ற நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம்.''

கருவூல அமைச்சர் கனம் கோபால ரெட்டியார், ''கலகக்கார'' கழகத்தவர்மீது, காருண்யம் மிக்ககாங்கிரஸ் சர்க்கார் எடுத்துக் கொண்டுள்ள கண்ணியமான நடவடிக்கைகளின் கனமான பட்டியல் இது என்று கூறியவண்ணம் ''கனதனவான்கள்'' நிறைந்த சட்டசபையில் கொஞ்சம் கம்பீரமான குரலிலேயே, இந்தக் ''கவுரமான'' பட்டியலை 'கனஜோரா'ச் சமர்ப்பித்துள்ளார்—சமர்ப்பணம் மிக அருமையான முறையிலேயே அமைந்துள்ளது!

1948 மார்ச் மாதத்தில் தொடங்கி 1949 மார்ச் முடிவதற்குள்ளாக, ஏறத்தாழ ஓர் ஆண்டு காலத்தில், பலம் பொருந்திய ஒரு சர்க்கார், ஒரு கட்சியின்மீது, பொதுக் கூட்டத் தடை, ஊர்வலத் தடை, 144 உத்தரவு, ஜாமீன் வழக்கு, விசாரணையின்றிக் காவல், தலைவர்கட்கு சிறைவாசம், பத்திரிகைகட்கு ஜாமீன், நாடகங்களுக்குத் தடை ஆகிய இவ்வளவு நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமானால், அந்தக் கட்சி மிக மிகப் பலம் பொருந்திய கட்சியாக இருக்கவேண்டும் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஒரு கட்சி பொதுமக்களின் அமோகமான ஆதரவைப் பெற்றதாகவும், ஏராளமான செல்வாக்குப் படைத்ததாகவும், மிகுந்த புகழும் பெயரும் வாய்ந்ததாகவும், சர்க்கார் கண்டு அஞ்சும் அளவுக்கு 'பலம்' நிறைந்ததாகவும் இல்லாவிட்டால், ஒரு முன்னூறு நாட்களுக்குள்ளாக இவ்வளவு அதிகமான நடவடிக்கைகளை, நாடாளும் சர்க்கார் அந்தக் கட்சியின்மீது நிச்சயமாக எடுத்துக் கொள்ளாது. சர்க்கார் வீசும் பாணங்களின் எண்ணிக்கையும் வேகமும் இவ்வளவு அதிகமாக இருப்பது ஒன்றே போதும் கட்சியின் பலம் எவ்வளவு மகத்தானது என்பதை எடுத்துக்காட்ட! கம்பளிமேல் கம்பளியாக நாம் போர்த்திக் கொண்டால்தான் தூங்க முடிகிறது என்றால் என்ன அர்த்தம்—குளிர், நாம் தங்கியிருக்கும் பிரதேசத்தில் தாங்கமுடியாத அளவுக்குப் பரவியிருக்கிறது என்பது தானே! அதுபோலத்தான் சர்க்கார் திராவிடர் கழகத்தின்மீது மேலும் மேலும் சரமாரியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டால் ஒழிய தாங்கள் நிம்மதியாக இருக்க முடியவில்லை என்றால், கழகம்; அவர்களின் நிம்மதியைக் குலைக்கும் அளவுக்கு வானுற ஓங்கி வளம் பெற வளர்ந்து விட்டது என்று பொருள்!

கனம் கோபால ரெட்டியார

தங்கள் கனம் பொருந்திய சர்க்கார், கனம் ஆகும் நிலைபெறாத கழகத்தின்மீது, தொடுத்துள்ள கனமான கணைகளை, சட்டசபையிலே, நூற்றுக்கணக்கிலே ஒரு நிமிஷத்திலே எடுத்துக் கூறுகிறார்—கூற முடிகிறது—கூறமுடியும் அளவுக்கு கணைகள் சரமாரியாகத் தொடுக்கப்பட்டுள்ளன கழகத்தின்மீது என்றால் கழகத்தின் செல்வாக்கு எவ்வளவு அதிகம் என்பதை எடுத்துக்காட்ட, சான்று, வேறு தேவையில்லை. சர்க்கார் இவ்வளவு அதிகமான நடவடிக்கைகளை கழகத்தின் மீது எடுத்துக்கொண்டிருப்பதே கழகத்தின் பலத்திற்கு அருமையான சான்று! ஆனால் அதைவிட அருமையான சான்று, இவ்வளவு ஈட்டிகளை கழகத்தின் மீது சர்க்கார் எய்த பின்னரும், கழகம், துளியளவும் தன் பலம் குன்றாது அசையாத இமயம் என நிமிர்ந்து நிற்கிறதே, நிமிர்ந்து நிற்கும் அளவிற்கு அதற்கு ஜீவ சக்தி ஏற்பட்டிருக்கிறதே, ஏற்பட்டிருக்கும் ஜீவ சக்தியைக் கண்டு "அசையாத மெஜாரிடியைக் கொண்ட எங்களை யாராலே அசைக்கமுடியும்?" என்று ஆணவ மொழிகளை வீசி ஆர்ப்பாட்டம் புரியும் ஆளவந்தார்கள்கூட அஞ்சி நடுங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதே, அந்த நிலைமையின் நிலைத்த தன்மையைக் கண்டு ஆரிய வட்டாரத்தில் அணுக்குண்டு வீழ்ந்ததுபோன்ற அதிர்ச்சியும் அவலக் குரலும் தோன்றியிருக்கிறதே, அதுதான்! ஆம்! அதுதான் திராவிடர் கழகத்தின் திண்தோள் வலிமைக்கும் திறமைக்கும் சரியானதோர் சான்று!

திராவிடர் கழகத்தின் அமோகமான பலத்தை, அதன்மீது எடுத்துக்கொண்டுள்ள அபரிமிதமான நடவடிக்கைகளை ஆவேசத்தோடும் அடுக்கடுக்காகவும் எடுத்துக்காட்டியதன் வாயிலாக நிரூபித்துக் காட்டிவிட்ட கனம் கோபாலர் கடைசியில் கூறுகிறார், "கழகத்தைப் பின்பற்றுபவர்கள் உண்மையில் அதிகம் இல்லை—பொது மக்கள் ஆதரவும் கழகத்திற்கு அதிகம் கிடையாது."

கழகத்திற்கு பொது மக்கள் ஆதரவும் இல்லையாம், பின்பற்றுபவர்களும் அதிகம் கிடையாதாம், கண்ணியமே உருவான கோபாலர் கூறுகிறார், பிறகு ஏன் சர்க்கார் ஆதரவே இல்லாத, இவ்வளவு சர்வ சாதாதாரணமான, மக்கள் துணையில்லாத, எவருடைய பின்பலமுமற்ற, ஆற்றுவாரும் தேற்றுவாரும் யாரும் அற்ற ஒரு கழகத்தின்மீது இவ்வளவு அதிகமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்?

கனம் கோபாலர் மேலும் கூறுகிறார்: "பல இடங்களில் பொது மக்கள் திராவிடக் கழகத்தாரைப் பற்றிக் கவனிப்பதே இல்லை! அவர்களைக் கைது செய்பவரும் போலீசாரைக் கண்டுதான் கூட்டம் சேர்ந்துவிடுகிறதே தவிர, அவர்களுக்காக பெரிய கூட்டம் எதுவும் கூடிவிடுவதில்லை. அவர்கள் விரும்புவதெல்லாம் தாங்கள் சர்க்காரால் கைது செய்யப்பட்டு அதன் மூலம் எளிதான முறையில் தங்கட்கு விளம்பரம் கிடைக்கவேண்டும் என்பதுதான்."

இவ்வளவு பலவீனமுள்ள, கூட்டம், கூட சேராத, போலீசாரை வேடிக்கை பார்ப்பதற்காக வருகிற மக்கள் தொகை அளவுகூட மக்கள் சேராத ஒரு சாதாரண கட்சி திராவிடர் கழகம் என்பது மெய்யானால், ஏன், கனம் கோபாலரின் சர்க்கார் தடியால் அடித்து தமிழ் காக்கும் தொண்டர்களை தரையில் சாய்க்கும் ஈவு இரக்கமற்ற கொடுமையிலிருந்து, தள்ளாத வயதில் தென்னாட்டுத் தலைவர் ஏறு பெரியார் இராமசாமியை வெஞ்சிறையிலிட்டு வாட்டி வதைக்கும் பாதகச் செயல்வரையில் உள்ள ஜனநாயகக் கொலைகள் அத்தனையையும் புரிதல் வேண்டும்?

மக்கள் அனுதாபம் கிடையாது—கூட்டமோ சேர்வதில்லை—சர்க்கார் கைது செய்தால் ஒழிய வேறு விதத்திலே விளம்பரமோ புகழோ கிடைப்பதில்லை — பின்பற்றுபவர்களோ ஒரு சிலரும் இல்லை என்று பரிதாப ஓவியம் தீட்டுகிறார் கனம் கோபாலர், திராவிடக் கழகம் ஓர் அரசியல் அநாதை என்று சொல்லாமல் சொல்லுகிறார், கழகத்திற்கு செல்வாக்கே கிடையாது—நாங்கள் கைது செய்து அவர்களைத் தியாகிகளாக ஆக்கினால்தான் அவர்கள் புகழ் பெறுவர்—நாங்களா ஏமாறுவோம்—கைது செய்ய மாட்டோம் அவர்களை என்று ஏதேதோ பேசுகிறார், ஆனால் கழகம், கனம் கோபாலர் தீட்டிக் காட்டுவதுபோல, ஓர் அரசியல் அநாதையாக இருக்குமானால் அந்த அநாதையை சும்மா விட்டுவிட்டாலே உண்ண உணவும் (மக்கள் ஆதரவு) இருக்க இடமுமின்றி (பின்பற்றுவோர் ஆதரவு) இறந்து போகுமே அந்த அனாதை, ஏனோ இவர்கள் அந்த அனாதையை தடியால் அடித்தும், சிறையில் தள்ளியும், 2000 ரூ ஜாமீன் கேட்டும், 144 களை வீசியும் கொடுமை பலவற்றிற்கு உள்ளாக்கியிருக்கின்றனர். ஏன் என்று கேட்பாரற்ற அந்த அனாதையிடம் சர்வ வல்லமை பொருந்திய கோபாலர் சர்க்காருக்கு ஏன் இவ்வளவு அச்சம்? ஏன் இவ்வளவு நடுக்கம்? ஏன் இவ்வளவு உதறல்? ஏன்?

கழகத்திற்கு ஆதரவே கிடையாது, அது அனாதை என்றும் கூறுகிறார், அதே மூச்சிலே, அதே விநாடியிலே, கழகத்தின்மீது சர்க்கார் தொடுத்துள்ள சமர் எவ்வளவு உக்கிரமானது என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். சின்னஞ்சிறியதோர் சிட்டு என்கிறார் கழகத்தை, அதே நேரத்தில் பீரங்கிப் பிரயோகம் செய்திருக்கிறோம் கழகத்தின்மீது—நாங்களா நடவடிக்கை எடுத்தோமில்லை? என்றும் சீறுகிறார்! புல்தடுக்கி, ஓலைப் பாய், தொட்டால் சுருங்கி, சுண்டைக்காய் என்றெல்லாம் கேலிச் சொல் வீசுகிறார் கழகத்தின்மீது இந்தப் பயில்வான்! வீசிய சொல் காற்றில் மிதக்கா முன்பே அந்தச் "சுண்டைக்காயை" எதிர்ப்பதற்காக இந்தப் "பயில்வான்" பட்டபாடு எவ்வளவு அதிகம் என்பதை எடுத்தெடுத்துக் காட்டுகிறார்! கனம் கோபாலர் பேச்சிலே ஏன் இவ்வளவு முரண்பாடு?

ஒன்று: திராவிடர் கழகம் ஒரு சிட்டுக்குருவி என்று கூறுவது பொய்யாக இருக்கவேண்டும் அல்லது, "அது பொய் அல்ல! மெய்தான்! கழகம் சின்னஞ் சிறியதோர் சிட்டுதான்!?', என்று கனம் கோபாலர் கூறுவதானால் அந்தச் சிட்டுக்குருவிமீது பீரங்கிப் பிரயோகம் செய்ததும், இனியும் செய்ய இருப்பதாகக் கூறுவதும் கடைந்தெடுத்த முட்டாள்தனம் என்பதையாவது அவர் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

"இல்லை இல்லை! கழகம் ஒரு சிட்டுக்குருவி என்பதும் மெய்தான்! அதன்மீது சென்னை சர்க்கார் பீரங்கிப் பிரயோகம் செய்ததும் நியாயந்தான்" என்று கனம் கோபாலர் கூறுவாரானால், சென்னை சர்க்காருக்கு என்ன

# நாடும் ஏடும்

## கனம் கோபாலருக்கு ஆபத்து!

"இந்த பட்ஜட்டை சமர்ப்பித்த தினத்தன்று நிதி அமைச்சர் கோபால ரெட்டியார் மட்டும் என் கண்ணில் தனியாகப் பட்டிருந்தால் நிச்சயம் நான் அவரைத் தாக்கியிருப்பேன்! பட்ஜட்டைப் பார்த்தவுடனே எனக்கு அவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டது! ஏழைகள் மீது இந்த பட்ஜட்டின் மூலம் நிதி அமைச்சர் சுமத்தும் வரிச்சுமை அவ்வளவு அதிகம்!"

—இந்த ஆத்திரம் மிகுந்த வார்த்தைகளை அள்ளி வீசியிருப்பவர் யார் என்று நினைக்கிறீர்கள்? "யாராய் இருக்கமுடியும், நிச்சயம் இது யாரோ ஒரு கருஞ்சட்டைத் தோழரால்தான் கூறப்பட்டிருக்கும்!" என்பீர்கள். இல்லை! இந்த வாசகத்தைப் கூறியவர் ஒரு சட்டசபை உறுப்பினர்!

"ஓஹோ! அப்படியானால் முஸ்லிம் லீகர் யாராவது சொல்லியிருப்பார்! ஜனாப் ரசாக்கான் M. L. A. வாக இருக்கும்! ஆம், அவர்தான்" என்பீர்கள்! இல்லை, அவரல்ல, சொன்னவர் முஸ்லீம் அல்ல!

"அப்படியானால் சட்டசபையில் இருக்கும் கம்யூனிஸ்ட் தோழர் வெங்கடேஸ்வரலுவாக இருக்கும்! இவ்வளவு காரசாரமாகப்பேசுவது அவருடைய வழக்கம்தான்" என்கிறீர்களா? இல்லை இல்லை நண்பர்களே அவர் எங்கோ பூமிக்கடியில் இருக்கிறார், சட்டசபைக்கே வருவதில்லை! எனவே அவரல்ல!

இந்த வாசகத்தைக் கூறியிருப்பவர் கம்யூனிஸ்டுமல்ல, சோஷலிஸ்டுமல்ல, லீக் உறுப்பினரும் அல்ல, திராவிடர் கழகத் தோழருமல்ல, ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ! அதுவும் மிக முக்கியமான எம். எல். ஏ! பெயர், **காளேஸ்வரராவ்!**

ஏன் அப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்? காளேஸ்வரராவ்தான் சொல்லியிருக்கிறார்! உண்மையாகவேதான்!

"என்ன சொன்னாலும் நாங்கள் நம்பமாட்டோம்! இதெல்லாம் போர்வாள் இதழின் சொந்தச் சரக்கு" என்கிறீர்களா, அப்படியானால் "**பாரததேவி**" உண்டல்லவா, பார்ப்பன சோஷலிஸ ஏடு (பார்ப்பன சோஷலிசம் என்று தனியாக ஒரு சோஷலிசம் இருக்கிறதா என்று கேட்கிறீர்களா, இருக்கிறது தோழர்களே இருக்கிறது, அதுதான் பாரததேவியின் சோஷலிசம்!) அந்த ஏட்டின் 5—3—49 இதழைப் பாருங்கள், 4-வது பக்கத்தில் முதல் பத்தியில் பளிச் பளிச் என இந்தச் சேதி கண்களைப் பறிக்கும் விதத்தில் மின்னக் காண்பீர்கள்!

## நம்மாலே ஆகுமா?

நமது முதலமைச்சர் ஓமந்தூராருக்கு கொஞ்ச நாட்களாக ஒரு சந்தேகம்! அதை அவர் போகிற இடத்திலெல்லாம் சொல்லிக் கொண்டே இருக்கிறார்! "தென்னாடு மிக மிகச் சிறிய நாடாயிற்றே—இது எப்படி ஒரு தனி நாடாக இருக்கமுடியும்—இவ்வளவு சிறிய நாடு தனி நாடாக இருந்தால் அது தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முடியுமா—நம்மாலே ஆகுமா இந் நாட்டைக் காப்பாற்றுவது"—இதுதான் அவருடைய சந்தேகம்! "கிருத்திகை என்று வருகிறது—மவுன விரதம் இருக்கலாம்" என்பதற்காக பஞ்சாங்கத்தைப் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டவரே தவிர ஓமந்தூரார், அட்லாசைப் பார்த்திருக்கமாட்டார். அதனால்தான் அவருக்கு இந்த சநதேகம் பிறந்திருக்கிறது! பஞ்சாங்கத்தை ஒரு ஐந்து நிமிஷ நேரம் மூடி வைத்துவிட்டு, அட்லாசை எடுத்துக் கொஞ்சம் புரட்டினால் போதும், தெளிவாகத் தெரிந்துகொள்வார் திராவிடநாடு அவர் நினைப்பதுபோல அப்படி ஒன்றும் சிறியநாடு அல்ல என்பதை! திராவிடநாடு ஜெக்கோஸ்லேவேகியாவைவிட 2 மடங்கு பெரிய நாடு, கிரீசைவிட 3 மடங்கு பெரிய நாடு, போர்ச்சுகல், ஆஸ்டிரியா, அயர்லாந்து ஆகிய ஒவ்வொன்றையும்விட 4 மடங்குபெரிய நாடு, ஹாலந்து, பெல்ஜியம் இவற்றைவிட 10 மடங்கும், பாலஸ்தீன் அல்பேனியா இவற்றைப் போல 15 மடங்கும், அல்ஸ்டரை விட 27 மடங்கும் பெரிய நாடு என்னும் இந்த உண்மைகளை அட்லாஸ் அவருக்கு விளக்கும். அட்லாசை ஆர அமர பார்த்துவிட்டு பிறகு வேண்டுமானால் பாடட்டும் நம்மாலே ஆகுமா பதிகத்தை! இப்போது வேண்டாம்! இத்தனை நாடுகளாலும் தனியாக இருக்க முடியுமானால் இவை அத்தனையையும்விட பெரிய நாடாகிய நம்மாலேயா தனியாக இருக்க முடியாது? இந்த 'சுண்டைக்காய்' நாடுகள் எல்லாம் தம்மைத் தாம் காப்பாற்றிக்கொள்ள முடியுமானால் நாம் தானா நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது? ஏன் முடியாது?

---

சித்தத்தில் ஏதேனும் பித்தமோ என்று—நாம் கேளாவிட்டாலும் [நாம் கேட்டால்தான் எடு ரூபா 2000 ஜாமீன் என்று சொல்லிவிடுவார்களே இந்த சர்க்கார்!]—நாடு கேட்கும்! நிச்சயமாகக் கேட்கும்!

தன்னை எதிர்த்தவனை "சுண்டைக்காய்" என்று இலேசாகத் கூறிவிடலாம் பயில்வான், ஆனால் அவன் நண்பன் கேட்கவில்லையா சுண்டைக்காயை நசுக்குவதற்கா பயில்வான்நீ பெருமூச்சுவிடும் அளவுக்குப் போராடினாய் என்று! அதுபோலத்தான் திராவிடர் கழகத்தவரை ஆதரவற்றவர்கள், செல்வாக்கு இல்லாதவர்கள், சிட்டுக்குருவிகள் என்றெல்லாம் சர்க்கார் கூறுவார்களானால், கூறிவிட்டு அதே நேரத்தில், எங்களிடத்தில் உள்ள சகலவிதமான ஆயுதங்களையும் ஏவி இருக்கிறோம் அந்த சின்னஞ்சிறிய சிட்டுகளை வீழ்த்துதற்கு என்றும் கூறுவார்களானால் நாட்டு மக்கள், நாடாளவந்தோரைப் பார்த்து, "சிட்டுக்குருவிமீது பிரங்கிப் பிரயோகம் செய்திருக்கிறோம்—இனியும் செய்யத்தவறோம் என்று வெட்கமின்றிக் கூறுகிறீர்களே வீணர்களே, உமக்கென்ன சிந்திக்கும் திறமையே அற்றுவிட்டதோ, சிறிதளவும் பொது அறிவு என்பது இல்லையோ!" என்று சற்று காரமாகவே கேட்பார்கள்—இப்போது கேட்டால், சர்க்கார், மலபார் போலீசையும் இரட்டைக்குழல் துப்பாக்கியையும் கண்ணீர்ப்புகை குண்டுகளையும் சிறைச்சாலை வாயிலையும் காட்டுவார்கள்! எனவே இப்போது கேட்க அவர்கள் அஞ்சினாலும் அடுத்த தேர்தலின்போது கட்டாயம் கேட்பார்கள்! நெஞ்சில் நிறுத்தட்டும் சர்க்கார் இந்த உண்மையை!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கருப்பாயி! ஒரு குடம் தண்ணி கொண்டா. தலையில் ஊற்று.

(கருப்பாயி ஒரு குடம் தண்ணீரைத் தலையில் ஊற்றினள், இன்னும் சில பெண்கள் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றினர்கள். தண்ணீர் உப்புக் கடைக்குள் புகுந்து உப்பைக் கரைத்தது. கடைக்காரன் திட்டிக்கொண்டு மிஞ்சியதை எடுத்துக்கொண்டு அப்புறம் போனன்.)

பெண் வேடம் கொண்ட சார்யா:— வேப்பிலையை வாயில் மென்றுகொண்டும், கைகளில் வேப்பிலையை வீசிக்கொண்டும்,

"ஏ! ஏ! அற்ப ஜனங்களே, என்னை யாரென்று நினைத்தீர்கள்? விளையாட்டா? வேடிக்கையா? வெட்கங்கெட்ட மானிடரே! விளையாட்டே வினையாகும். விரைவிலே காட்டி வைப்பேன்! பேச்சியனை, நாச்சியப்பா, பிரியமுள்ள செல்லியண்ணே! கருப்பையா, காத்தமுத்து, சிவப்பையா! செம்முனியா! எல்லாரும் இவ்வேளை இங்கு வந்து சேர்ந்திடுங்கள். உங்களிட தலைவன், உலகநாதன் கூப்பிடுறேன். மலைக்கோயில் விட்டிறங்கி வந்திருக்கேன் இவ்வழியாய்! தாமதங்கள் பண்ணுமல் சடுதியில் வரவேணும்!

ஒருத்தி: பாத்திபாடி நான் சொல்லுலே! நம்ம லோகநாதசாமி தான் இவள் பேரில் வந்திருக்குது. இன்னம் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றுங்கள். சாமிக்கிக் குளித்தியாகட்டும்.

சாமியாடிப்பெண் (சார்யா):— "உலகைப்படைத்ததிலே உயிர்களை யுண்டாக்கியதார்? உடல் வளர்க்க உணவளித்து உயிரனைத்தும் காப்பவரார்? உருசியுடன் உண்பதற்கு உப்பைக் கொடுத்தவரார்?

மக்கள்: 'நீ தான் சாமி! லோகநாதன்தான்"

சாமியாடி: "கடல் நீருக்குள் உப்பைக் கரைத்து வைத்ததார் சொல்லு?"

மக்கள்: நீதான் சாமி.

சாமியாடி: "அப்பிலே உப்பினைப்போல் அனைத்திலும் நான் கலந்திருப்பேன், மண்ணிலே போட்டவிதை மரமாகச் செய்திட்டேன். விண்ணிலே சூரியனை வட்டமிடச் செய்திட்டேன், வானிடிந்து விழாதபடி நானல்லோ தாங்கி நிற்பேன்! என்பெருமை தெரியாமல் என்னை மதிக்காதார், இவ்வுலகில் கணமேனும் இருக்க முடியாது. என்னை யறிந்தவர்கள் என்னை மதிப்பவர்கள் இன்பமுடன் வாழ்ந்திடுவார் எந்நாளும் பூமியிலே!

மக்கள்: சாமியின் சக்தியைத் தெரிந்துகொண்டோம். ஏழைகள் என்ன தப்புச் செய்திருந்தாலும் மன்னித்துக் காப்பாற்ற வேணும் லோகநாதா!

(பலர் நிலத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரிக்கின்றனர்.)

சாமியாடி: "நன்றிகெட்ட மானிடரை நாம் நினைக்கும்போதெல்லாம் நெஞ்சு பொறுக்குதில்லை—நிஷ்டூரம் பொங்குது! ஆங்காரம்கொண்டு மனம் அடங்கேனே யென்கிறது! அரைக்ஷணத்தில் அனைவரையும் அழித்துவிடத்தோணுதடா! மாரியோடு காளிகளை, மாகோபக்காரிகளை, ஏவியிந்த ஊரை நிர்த்தூளி செய்யத் தோணுதடா!"

மக்கள்: வேண்டாம் சாமி! கோபிக்கக்கூடாது. என்ன குற்றமிருந்தாலும் பொறுத்துக்கொள்ளுங்கள்!

சாமியாடி: நேற்று வருஷம் நினைத்துப்பார், சொல்லுகிறேன்! பூ சாட்டிப் பொங்கலிடத் தவறியதேன் சொல்லுமடா!

மக்கள்: தப்புதான் சாமி தவறிப்போச்சு.

ஒருத்தி: ஆமாம்போ, அந்த மாசத்திலே, ஊரிலே, ஆத்தா விளையாடிட்டிருந்தாளே, எப்படிச் சாட்றது? எப்படிப் பொங்கலிடறது?

சாமியாடி: பொங்கலிட்டுப் பூசைகளும் போடாததால் தாண்டா, சங்கடங்கள் பண்ணி வைத்தோம் தங்கைதனை யனுப்பி! அப்படியும் நீங்களெனை யறிந்து கொள்ள வில்லையடா! என்னை நினைப்பவர்கள் இல்லையடா ஒருவருமே! கோவிலுக்கு வருகிறவர் கொஞ்சமடா கொஞ்சமடா! கூலி பெறும் பூசாரி காலையிலே தினமும் வந்து, பேருக்குச் செய்யும் பூசை யாருக்கடா ஒப்பாகும்? உங்களிலே சிலர் என்னை உதாசீனம் பேசறதும், கல்லென்றும் செம்பென்றும் கடவுளைப் பார் என்றும், சொல்லுவதும் சிரிப்பதும் தெரியுமடா எந்தனுக்கு! நன்றி கெட்ட இவ்வுலகில் நாமிருக்க விரும்பவில்லை! வானுலகில் தேவரெல்லாம் வர வேண்டுமென்று சொல்லி, நாளுந் தவங்கிடந்து நத்தியே காத்திருக்கார். அரிய தவங்கிடந்து அழைக்கிறர் தேவரெலாம்! இந்திரனர் செய் தவத்திற் கிரங்கியே இப்போது, இந்திரலோகம் போகின்றேம் மானிடரே இன்றுமுதல், உங்களுக்கு வந்து விடும் துன்பங்களைக் காப்பாற்ற கடவுளிலே கைகொடுக்க யாருமிலே அறியுங்கடா!

மக்கள்: லோகநாதா! நீ தேவலோகம் போகக்கூடாது.

சாமியாடி: என்ன தான் சொன்னலும் இனியிருக்க முடியாது. முன்வைத்த காலை இனி பின் வைக்க முடியாது. தேவர்கட்குக் காட்சி தரவேணும் தவறுமல்!

மக்கள்: இன்றைக்கே திருவிழா ஆரம்பிக்கிறேம். ஏழாம் நாள் பொங்கல் இட்டுப் பூசை போடுகிறேம். தெய்வமே எங்களை விட்டுப் போகக்கூடாது.

சாமியாடி: முடியாது முடியாது முக்காலும் முடியாது.

மக்கள்: தேவலோகம் போய் தேவர்களுக்குக் காட்சி கொடுத்த பிறகாவது அங்கேயே தங்கிவிடாமல் உடனே யதாஸ்தானம் வந்து விடவேண்டும் பிரபோ! லோகநாதா! (சிலர் கெஞ்சுகின்றனர். சிலர் அழுகின்றனர் எல்லாரும் நமஸ்கரிக்கின்றனர்.)

சாமியாடி: சந்தோஷம்! சந்தோஷம்!! சஞ்சலங்கள் படவேண்டாம்! இன்றுமுதல் திருவிழா ஏற்பாடு செய்யுங்கள்; எல்லாரும் பத்தியுடன் என்னையே தியானியுங்கள். அந்தரங்க சுத்தியுடன் அன்பாகப் பூசியுங்கள்! காலை யதிகாலையிலே நம்முடைய கோயிலிலே, சோதனைகள் காட்டிடுவோம். சந்தேகம் தீர்த்திடுவோம்! நாம் போன வரலாறும் நாம் திரும்பி வரும் நாளும், உங்களிட பூசாரிக் குரைத்திடுவோம் காலையிலே! இப்போது இந்திரனும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கான்! பரிவார தேவதைகள் வழி பார்த்துக்கொண்டிருப்பார், போக விடை கொடுங்கள், போகின்ற பின்னலே! என்னைத் தொடர்ந்து எவரும் வரலாகாது! போகும் திசை பார்ப்பார் கண் பொட்டையாகிவிடும்! தலை நிமிர்ந்து பாராமல் சாஷ்டாங்க தண்டனிட்டு, அரை நாழி நேரம் அப்படியே படுத்திருந்

கள்! (எல்லாரும் நிலத்தில் குப்புறப் படுத்துக்கொள்கின்றனர்.)

"அப்ரகடப்ரா! அப்ரகடப்ரா! அல்லல அல்லல அண்டங் கிடுகிடு அல்லல; இந்திரா வந்தேன் ஹாய் ஹாஸ்"

(சாமியாடிப் பெண் மாய மாயமாய் மறைந்துவிடுகிறாள். சுமார் பத்து நிமிஷங் கழித்து ஒருவன் மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்க்கிறான். சாமியாடியைக் காணவில்லை. கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து, "டே பெத்தியணு, செட்டியப்பா, ஊராளி எல்லாம் எழுந்திருங்கடா சாமி மலையேறிப்போய் ரொம்ப நேரமாய்ட்டுது." என்று எல்லோரையும் எழுப்புகிறான். எல்லாரும் எழுந்து நின்றும் சுற்றுமுற்றும் பார்க்கின்றனர். சாமியாடிப் பெண்ணைக் காணவில்லை.)

## அப்போது நிகழ்ந்த பேச்சு :—

சாமியாடி எங்கே?

நீதான் சொல்லே!

நான்தான் கண்ணை மூடி மண்ணைக் கௌவிக்கொண்டு குப்புறக் கிடந்தேனே.

எல்லாந்தான் குப்புறக் கிடந்தோம்.

ஆமா, ஆள்மேலே சாமிவந்தா, சாமிதா மலையேறிப் போய்விடும்; ஆளகூடவா மறைஞ்சிடும்?

நம்ப கருப்பாயிக்கி சாமி வந்தா, சித்தநேரம் போனதும், சாமி மலையேறிப் போய்டும்; அப்புறம் நம்ம கருப்பாயி அப்படியே அச்சுக்குலையாமெ பழய கருப்பாயியாகவே இருக்கிறாளே...?

இதென்னவோ சந்தேகமாத்தாணிருக்குது.

யாரோ பொம்பளை வந்து எல்லாரையும் ஏமாத்திட்டுக் கம்பி நீட்டிபிட்டா.

அப்படியெல்லாம் சொல்லாதே. சாமிக்கு கோபம் வந்தால்?

வம்புந்தும்பும் பேசித்தானே, இப்போ நம்ப லோகநாதசாமி கோவிச்சிட்டுப் போய்ட்டுது.

போடா போ! லோகநாதசாமி கோயிலிலே இருக்குது இவயாரோ மோசக்காரி, நம்பளை முட்டாளாக்கிட்டுப் போயிருக்கிறா.

அவளை மோசக்காரியிண்ணு சொல்றயே, அவயேன் அப்படிச் சொல்லணும்? காசா பணமா, யார் கொடுக்கிறா?

என்னமோ சநதேகந்தான். அவளும் நம்மைப்போல மனுஷ ஜன்மமாயிருந்தா இங்கே இருக்க வேணுமல்லவா?

லோகநாதசாமியே இந்தப் பொம்பளே உருவிலே ஏன் வந்திருக்கக்கூடாது?

சாமி அவதாரம் பண்ணுதுண்ணு சொல்றாங்கல்ல. அப்படியிருக்கச்கூடாதா?

இருந்தாலும இருக்கலாம். அவ சொன்னதெல்லாம நிசமாகத்தான் சொன்னா.

எல்லாச் சங்கதியும் விடிஞ்சாத் தெரியுது, கோயிலுக்குப்போனா நாளைக்குச் சோதனைகள் தெரியுமிண்ணு சொன்னாளல்ல.

சரி எல்லாரும் குளிச்சு முழுகி நாளை உதயத்துக்குக் கோவிலுக்குப் போவோம். பூசாரியை நேரத்திலேயே புறப்படச் சொல்லணும்.

மக்கள்: எல்லாரும் கலைந்து தங்கள் வீடு செல்கின்றனர்.

(தொடரும்)

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இதே கோபால் ரெட்டியார்களின் கோபத்திற்கும் கொதிப்புணர்ச்சிக்கும் அஞ்சாமல் நெடுங்காலமாகக் கூறிவருகிறான்—என்றாலும் இதே கோபாலனார் அன்றும்தான் கருஞ்சட்டையினரைத் தூற்றினார்—இன்றும்தான் தூற்றுகிறார்—ஏன்?—அதுதான் நமக்குத் தெரியவில்லை!

வகுப்பு வேற்றுமையின் பிறப்பிடமே பார்ப்பன வட்டாரம்தான் என்பதை தெள்ளத்தெளிய எடுத்துரைத்த கனம் கோபாலர், கடைசியில், பார்ப்பன மாந்தரை விளித்து, அவர்கட்கு ஓர் அறிவுரையும் கூறியிருக்கிறார் அறிவுரை மட்டுமல்ல அது. பழைய 'விடுதலை' இதழ் ஏதோ ஒன்றிலிருந்து கத்திரித்து எடுக்கப்பட்ட வாசகம்கூட! கூறுகிறார் கோபாலனார், பார்ப்பனத் தோழனைப் பார்த்து:—

**"நீயே வகுப்புத் துவேஷியாக இருந்து கொண்டு, மற்றவனைப் பார்த்து வகுப்புத் துவேஷி என்று பழி சுமத்துவதில் அர்த்தம் எதுவும் இருக்கமுடியாது, மற்றவன் தன்னுடைய உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்ற கருத்தோடு முனைந்து நின்று, "நானுந்தானே வரி கொடுக்கிறேன், எனக்குந்தானே உரிமை உண்டு, எனக்குந்தான் உத்தியோகம் வேண்டும்" என்று கேட்கத்தொடங்கில், உடனே அவனைப்பார்த்து வகுப்புத் துவேஷி என்று கூக்குரலிடுகிறாய். இப்படி நீ கூச்சல் போடுவதால் உனக்கும் நன்மை இல்லை அவனுக்கும் நன்மை இல்லை."**

அக்கிரகாரத்தைப் பார்த்து, இந்த அறிவுரையை வீசியதோடு அமைந்தாரில்லை அன்பர் கோபாலனார், இந்த அறிவுரையின் உட்பொருளை—வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் தேவைதான் என்ற தத்துவத்தை ஆந்திர கேரள கன்னட தமிழக மாகாண காங்கிரஸ் கமிட்டிகளில் ஏதாவது ஒன்றாவது மறுக்க முடியுமா என்று அறைகூவலும் விடுத்திருக்கிறார். கனம் கோபாலர் கூறியிருக்கிறார்:

"நாங்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை, அது எல்லா வகுப்புகளுக்கும் சமநீதி வழங்கும் கருவி என்ற காரணத்தால் ஆதரிக்கிறோம். இது தவறு என்று கேட்டால், தாய்நாட்டின் விடுதலைக்காக வீரப்போர் விளைத்த தீரர்கள் பலரை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும் அந்தக் கமிட்டிகள் என்ன தீர்ப்பு அளிக்கும்? நாங்கள் செய்தது சரிதான் என்று கூறுமா? அல்லது எங்கள் போக்கு பார்ப்பனத் துவேஷப் போக்கு என்று கூறுமா? நிச்சயமாக, அந்தக் கமிட்டிகள் எங்களை, எங்கள் போக்கை, ஆதரித்தே தான் தீர்ப்பளிக்கும் என்பதில் எனக்குத் துளியும் ஐயமில்லை."

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தத்துவத்தை காங்கிரஸ் சர்க்கார் மட்டும் அல்ல, காங்கிரஸ் கட்சியும் கூட ஒருபோதும் மறுக்க முடியாது என்கிறார் கனம் கோபாலர்! இவர் குறிப்பிடும் இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்வ உரிமைக்காகவே, கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலாகவே, இந்த கனம் கோபாலர்களின் பழிச்சொல்லைப் பொருட்படுத்தாமலே, போராடி வந்த நமக்கு நம்மைத் தூற்றிவந்த கோபாலர்களே இன்று நம் கொள்கைக்கான சிறந்த வக்கீல்களாக மாறிவிட்டதைக்காண்கிறோமே, இதைவிட மகத்தான வெற்றி வேறென்ன வேண்டும்?

---

பதிவு எண் M. 4912

# தேசத்தின் பொருளாதார நலனே தேசத்தின் பலம்!

தேசத்தின் பொருளாதார நலனுக்கு
மக்களின் சேமிப்பு அவசியம்!

மக்களின் சேமிப்பைக் கொண்டு
மகத்தான நிதி திரட்டலாம்!

மகத்தான நிதியினுல் நாட்டில் பல
செல்வப் பெருக்குத் திட்டங்கள்
ஆரம்பிக்கலாம்!

செல்வப் பெருக்கினுல் மக்கள்
க்ஷேம மடைவர்!

★

ஆகையினுல் உங்களாலியன்றவரை சேமித்து
உங்கள் பணத்தை

**நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளில்**
போடுங்கள்

★

5 வருட, 7 வருட, 12 வருட சர்டிபிகேட்டுகள்
எல்லா தபாலாபீசுகளிலும் கிடைக்கும்
உயர்ந்த வட்டி—சிறந்த முதலீடு—சுலபமாக
பணமாக்கக் கூடியவை.

Edited, Printed and ...shed by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
at Free Printers 147, C...hant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)